1991 செப்டம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்கள் தான் தமிழகத்தினுடைய முதுகெலும்பாக இருக்கின்ற கால கட்டத்தில், நகரத்தை மையமாக வைத்து நகரப் பேருந்துகள் 30 கிலோ மீட்டருக்குச் செல்கிற காரணத்தினாலே, நகரத்திலிருந்து 30 கிலோ மீட்டர் அந்தப் புறம் இருக்கக்கூடிய கிராமங்களுக்கு பஸ் வசதி இல்லாமல் இருக்கிறது.... ஆகவே கிராமப்புறத்தை மையமாக வைத்து, நகரப் பேருந்துகள் என்பதற்கு பதிலாக கிராமப் பேருந்துகள். என்று ஒன்று துவங்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன். அமைச்சரிடமிருந்து இந்த வினாவிற்கு விடை எதிர் பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதுமையான கேள்வியை கேட்டிருக்கிறார்கள். இங்கே 35 கிலோ மீட்டர் தூரத்தில் இயக்கப்பட வேண்டும் என்று சொன்னால் ஆயிரம் மக்கள் தொகை வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் உங்களுடைய கிராமப் பகுதியில், 40, 45 கிராமங்களில் 50 கிலோ மீட்டரில் வேண்டுமென்றாலும் இயக்கப்பட முடியாத சூழ் நிலை உருவாகி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிந்தது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

பி. அண்ட் சி. ஆலையைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதின் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ப. ரங்கநாதன் அவர்கள்,

திரு. ப. ரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6, மாதங்களாக சென்னை மாநகரத்திலே இருக்கக்கூடிய பி. அண்ட் சி. ஆலை மூடப்பட்டிருக்கிறது. அதைத் திறப்பதற்கு உண்டான பணிகளை தொழிலாளர் நலத்துறை அமைச்சரும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

[1991 செப்டம்பர் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பொருள் பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்று திரு. பரிதி இளம் வழுதியும், திரு. வி. தம்புசாமி, டாக்டர் தே. குமாரதாஸ் மற்றும் திரு. ஜி. பழனிசாமி ஆகியோரும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களும் இப்பிரச்சினையை அவையில் எழுப்பியதாகக் கருதி பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இளம் வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்தான் முதலிலே கொடுத்தேன். நீங்கள் என்னை அழைக்க வில்லை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை இல்லை; நீங்கள் அதை இதற்குச் சொல்லக் கூடாது நீங்கள் முதலிலே கொடுத்தது என்பது வேறு. அப்படி முதலிலே கொடுத்தது என்றால்—பிறகு அதே மாதிரி ஒவ்வொருவரும் நாங்கள் முதலிலே கொடுத்தது என்று சொல்ல ஆரம்பித்தால் எப்படி? அவர் அதை அவையை ஆரம்பித்த அன்றைக்கே கொடுத்தார்கள். (குறுக்கீடு) நீங்கள் கேளுங்கள். நீங்கள் வேறு ஒரு பொருளில் கொடுத்தீர்கள். அதே மாதிரி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள் இது பற்றி மேற்கொண்டு அரசாங்கத்தினுடைய பதிவு தான் உங்களுக்கு தேவை. நீங்களும் எழுப்பியிருக்கிறீர்கள் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) திரு. இளம் வழுதி.

திரு. இளம் வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே உடனடியாக அந்த ஆலையைத் திறந்து தொழிலாளர்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றி வைக்கும்படி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெரம்பூரில் உள்ள பி. அண்டு சி ஆலையில் பணியாளர்களையும் சேர்த்து மொத்தம் 6,800. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பற்றி திரு. சிங்காரம் அவர்களும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெரம்பூரில் உள்ள பி. அண்டு சி ஆலையில் பணியாளர்களையும் சேர்ந்து மொத்தம் 6,800 தொழிலாளர்கள் உள்ளனர். இந்த ஆலையை மூட அனுமதி வேண்டி ஆலை

1991 செப்டம்பர் 9] *[டாக்டர் செ. அரங்கநாயகம்]*

முற்பகல் 10–05

நிர்வாகம் தொழில் தகராறு சட்டப் பிரிவு 25 ஓ-வின் கீழ் தொழிலாளர், ஆணையருக்கு மனு செய்தனர். ஆலையில் தேவைக்கு அதிகமான தொழிலாளர்கள் உள்ளனர் என்றும், குறைந்த அளவே உற்பத்தியும் உற்பத்தித் திறனும் ஆலையில் இருந்து வருவதாகவும், ஆலையில் துணி பதப்படுத்தும் பிரிவை சென்னையிலேயே தொடர்ந்து நடத்துவதால் மிகுதியாக செலவு பிடிக்கிறது என்றும் காரணங்களை முன் வைத்து ஆலையை மூட நிர்வாகம் அனுமதி கோரியது. துணி பதப் படுத்தும் பிரிவை சென்னையிலிருந்து தென்னாற்காடு மாவட் டத்தில் உள்ள புவனகிரிக்கு மாற்ற வேண்டும் என்பது நிர்வாகி கள் கோரிக்கை. இந்த கோரிக்கை மனுவை விசாரித்த தொழி லாளர் ஆணையர் ஆலையை மூட அனுமதி மறுத்து ஆணைகள் பிறப்பித்தார். தொழிலாளர் ஆணையரின் இந்த உத்திரவை எதிர்த்து ரிட் மனு ஒன்றையும், தொழிற் தகராறு சட்டப் பிரிவு 25 'ஓ' செல்லாது என மற்றொரு ரிட் மனுவையும் நிர்வாகம் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்தது. இதற்கிடையே நிர்வாகம் 1.4.1991 முதல் ஆலை இயங்கு வதை நிறுத்தி, தொழிலாளர்களுக்கும் வேலை மறுக்கப்பட்டது. இவ்வாறு அரசு அனுமதி இல்லாமல் ஆலையை மூடியதால் நிர்வாகத்தின் மீது குற்றவியல் வழக்கு தொடர அரசு ஆணை பிறப்பித்தது. மேற்குறிப்பிட்ட ரிட் மனுக்கள் விசாரணையில் இருக்கும்போதே ஆலையில் இயங்கிவரும் தொழிற்சங்கங்கள் இரண்டு மேல் முறையீடு மனுக்களை சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்தன. இந்த மேல் முறையீடு மனுக் களை விசாரித்த உயர்நீதி மன்றம் இந்த ஆலையின் துணி பதப்படுத்தும் பிரிவினை புவனகிரிக்கு மாற்றிடுவது குறித்தும் அதனால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்தும் ஆய்ந்து அறிக்கை ஒன்றை அளிக்க முன்னாள் சென்னை உயர்நீதி மன்ற ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி திரு. கே. வி. என். சிங் அவர்களை தனி நபர் குழுவாக நியமித்தது. ஆலையின் துணி பதப்படுத்தும் பிரிவை புவனகிரிக்கு மாற்ற வேண்டியதில்லை எனவும் அவ்வாறு மாற்றுவதால் தொழிலாளர்களின் நலன்கள் பாதிக்கப்படும் என தனி நபர் குழு உயர்நீதி மன்றத்திற்கு அளித்த தன் அறிக்கையில் தெரிவித்தது. குழுவின் இந்த அறிக்கையை தமிழக அரசு ஏற்றுக்கொள்வதாக உயர்நீதி மன்றத்திற்கு அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது. அதன் பின் உயர்நீதி மன்றம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பி. அண்டு சி. ஆலை மீண்டும் திறக்கப்படுமானால் ஆலைக்கு நாள் ஒன்றுக்கு தேவையான 4,000 கிலோ லிட்டர் தண்ணீர் நவம்பர் மாதம் முடிய வழங்க அரசால் முடியும் என்றும் அதன் பின் பருவ மழையைப் பொறுத்தே தண்ணீர் வழங்குவது குறித்து முடிவு செய்ய முடியும் என்றும் தண்ணீர் வழங்குதல்

[டாக்டர் செ. அரங்கநாயகம்] [1991 செப்டம்பர் 9

குறித்த அரசு நிலை உயர்நீதி மன்றத்திற்கு தெரிவிக்கப் பட்டது. இது தவிர உயர்நீதி மன்றம் கேட்டுக் கொண்ட தற்கு இணங்க இந்த ஆலை தொழிலாளர்களுக்கு 1991 ஜுலை மாதத்தில் ஆறு இலட்சம் ரூபாய் பெருமான மளிகை பொருள்களையும், ஆகஸ்ட் மாதம் மூன்று இலட்சம் பெருமான மளிகை பொருட்களையும் ஆலையின் பண்டகசாலை மூலம் வழங்க ஆலை நிர்வாகத்திற்கு அரசு கடனாக வழங்கியது. ஆக இந்த ஆலையின் தற்போதைய பிரச்சினை தொடங்கியதி லிருந்து சமரச முயற்சிகளை தமிழ்நாடு அரசு எடுத்து வந் துள்ளது. ஆலையினை மூட அனுமதி மறுத்த பிறகும், ஆலையை மூடிய நிர்வாகத்தின் மீது குற்றவியல் வழக்கு தொடரப்பட்டது. உயர்நீதி மன்றம் அனுமதித்த தனி நபர் குழு செயல்பட அரசு அனைத்து உதவிகளையும் செய்தது. தனி நபர் குழுவின் அறிக்கையை ஏற்பதாகவும், தண்ணீர் இருப்புக்கு ஏற்ப ஆலைக்குத் தேவையான தண்ணீர் வழங்க இயலும் எனவும் தன் நிலையை உயர்நீதி மன்றத்திற்கு அரசு தெரிவித்தது. இரண்டு மாதங்களுக்கு ஆலை தொழிலாளர் களுக்கு மளிகைப் பொருட்களை கடனாகவும் வழங்கியுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு இந்த ஆலைப் பிரச்சினையில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் நலன்களை கருதி தொடர்ந்து உரிய நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது. சென்னை உயர்நீதி மன்றத்தில் ஆலையை மூட அனுமதி மறுத்த தொழிலாளர் ஆணையரின் ஆணையை எதிர்த்து தொழிற் தகராறு சட்டப் பிரிவு 25 'ஓ' செல்லாது எனவும், நிர்வாகம் தொடுத்திருக்கும் இந்த இரண்டு வழக்குகளும் விசாரணையில் இருந்து வரு கின்றன. இவ்வாறு அடிப்படையான பிரச்சினைகள் உயர் நீதிமன்றத்தின் விசாரணையில் இருந்து வருவதால் இந்த வழக்குகள் முடிந்த பின்பே அரசால் நடவடிக்கை எடுக்க இயலும். இவைகள் தான் இப்பொழுது அந்த ஆலை சம்பந்தமாக இருக்கின்ற யதார்த்தமான நிலைமைகள் ஆகும். இருந்தாலும் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இந்த ஆலை சம்மந்தப்பட்ட நிர்வாகத்திடமும், ஆலை தொழிலாளர்களிடமும் நாங்கள் அதிகாரப்பூர்வமற்ற முறையில் பேச்சுக்களை நடத்தி வந்திருக்கிறோம். அந்த அடிப்படை யிலே இன்று வரையிலும் ஒரு நல்ல முடிவு எடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படவில்லை. நிர்வாகம் தன்னுடைய நிலையிலே பிடிவாதமாக இருக்கிறார்கள். தொழிலாளர்களும் தங்க ளுடைய நிலையிலே அவர்களும் அதிலே விட்டுக் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே இந்தச் சூழ்நிலையில் ஒரு முடிவு ஏற்பட முடியாமல் இருந்து வருகிறது. ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த 3, 4 மாத காலமாக வேறு பல பிரச்சினைகளில் கவனம் செலுத்திக் கொண்டு இருந்த காரணத்தினால் இந்தப் பிரச்சினையில் அவர்கள் தனிக்கவனம் செலுத்த முடியாத நிலைமை இருந்து வந்தது. என்றாலும், இன்றைக்கு, அதாவது இந்த கேள்வி நேரம் முடிந்து, இப்போது

நான் பேசி முடித்ததற்குப் பிறகு ஆலையின் தொழிலாளர் சங்கத் தலைவர், முன்னால் சட்டமன்ற உறுப்பினர் வரதராசன் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை சந்திக்க இருக்கிறார்கள். அந்த பேச்சு வார்த்தை நடைபெற இருக்கிறது. ஆகவே இதற்கு ஒரு சுமுகமான முடிவு ஏற்படும் என்ற நம்பிக்கை ஏற்படுகின்ற வகையில் அந்தப் பேச்சுவார்த்தை அமையும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பிரச்சினையை விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானமாக இதை எடுக்கவில்லை. தங்கள் கவனத்திற்கு அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள், அவ்வளவுதான்.

3. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பொது நிறுவனங்களுடைய அறிக்கையை பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் திரு. கி. தருமலிங்கம் அவர்கள் அளிப்பார்கள். திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நமது தமிழக முதலமைச்சரும் தமிழகத்தின் ஏழைகளின் இதய தெய்வமும், எங்களின் இதய தெய்வமுமான மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய முதற்கண் வணக்கத்தை அவர்களின் பாதங்களில் காணிக்கையாக்கிக் கொண்டு இந்தப் பேரவையில் பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கின்றேன்.

4. வரவு-செலவுத் திட்டம், 1991-92—பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991-92ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் மீது பொது விவாதம் தொடர்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய வேண்டுகோள். அதிகமான உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று நாள்தோறும் கேட்டு வருகிறார்கள். அவ்வளவு உறுப்பினருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று நாம் விரும்பினாலும் நேரம் இன்மையின் காரணமாக பல உறுப்பினர்களுக்கு